2008 ஏப்ரல் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி.*

திரு. ஆர். சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தூர் வாருவதற்காக இந்த ஆண்டு 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்கள். எங்களுடைய மேலூர் தொகுதியிலுள்ள கொட்டாம்பட்டி பகுதி, மானாவாரி பகுதியாக இருக்கிறது. பல வாய்க்கால்கள் மற்றும் கண்மாய்களைத் தூர் வாருவதற்கு மற்ற நிதியிலிருந்து நிதி ஒதுக்கப்படுவதில்லை. ஆகையால், அமைச்சர் அவர்கள் சிறப்பு முயற்சியெடுத்து, அந்த மானாவாரி பகுதியிலேயிருக்கின்ற கண்மாய்களையும், ஓடைகளையும் தூர் வாருவதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையின்மீது, நானே தனிக்கவனம் செலுத்தி, அதுகுறித்து விசாரித்து, முடிந்தால் ஆவன செய்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 173, மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

173—

இருக்கை ஒதுக்கீடு

***29613—திரு. து. ரவிக்குமார்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு விரைவுப் பேருந்துகளிலும், தனியார் பேருந்துகளிலும் மூத்த குடிமக்களுக்கென இருக்கைகள் ஒதுக்கீடு செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2008 ஏப்ரல் 29

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில், தொலைதூரப் பயணிகளின் வசதியைக் கருத்திற்கொண்டு, உடனடி தளம் வழிப்பதிவுத் திட்டம்—on line reservation—மூலமாக இருக்கை முன்பதிவு நடைபெற்று வருகிறது. இது மூத்த குடிமக்கள் உள்ளிட்ட பயணிகள் அனைவரும் முன்பதிவு செய்து பயன்படுத்திக்கொள்ள ஏதுவாக உள்ளது. இந்நிலையில் மூத்த குடிமக்களுக்கெனப் பிரத்தியேகமாக இருக்கைகள் ஒதுக்கீடு செய்ய இயலாத நிலை உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம்.

திரு. கு. செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு விரைவுப் பேருந்துகளிலும், தனியார் பேருந்துகளிலும் மூத்த குடிமக்களுக்கென இருக்கைகள் ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. இப்பொழுது குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை பயன்பெறும் நம்முடைய முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில், சிலநேரங்களிலே மூத்த குடிமக்களெல்லாம் வரிசையில் நிற்க முடியாமல், முன்பதிவு செய்ய முடியாமல் அவதிப்படும் நிலை இருக்கிறது. அவர்களுக்கு முன்னுரிமை அளிப்பதோடு, தனியார் பேருந்துகளிலும் இப்படிப்பட்டதொரு பழக்கத்தை நாம் நடைமுறைப்படுத்த முடியுமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்துகளில் ஊனமுற்றவர்களுக்கென்றும், முதியோர், உடல் ஊனமுற்றோர் ஆகியோருக்கு ஆண்கள் பகுதியிலே இரண்டு இடங்களும், பெண்கள் பகுதியிலே இரண்டு இடங்களும் மாநகரப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இப்பொழுது ஒதுக்கப்பட்டுள்ளன. தொலைதூரப் பேருந்துகளில், முன்பதிவு செய்கின்ற வசதியிருக்கின்ற காரணத்தால், முன்னாலே பதிவு செய்து கொள்ளலாம் என்ற வசதியிருப்பதால், தனியாக இதுவரை இட ஒதுக்கீடு செய்கின்ற எண்ணம் இல்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். இது அரசினுடைய கொள்கை முடிவு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்து பேசி, ஒரு நல்ல முடிவெடுக்கலாம்.

2008 ஏப்ரல் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம்.

திரு. கு. செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 174, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. வரதராஜன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

174—

மருத்துவமனை

***998—திரு. ரா. வரதராஜன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருதுநகர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையை அனைத்து வசதிகளுடன் மேம்படுத்தவும், மருத்துவர்கள் பற்றாக்குறையைப் போக்கவும் அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விருதுநகர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை 272 படுக்கை வசதிகளுடன், 10 சிறப்புப் பிரிவுகளும், அதற்குரிய சிறப்பு மருத்துவர்களுடன் இயங்கி வருகிறது. மேலும், இம்மருத்துவமனையில் சிகிச்சை பெற வரும் நோயாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஒப்பளிக்கப்பட்ட மருத்துவர் பணியிடங்கள் போதிய அளவில் இருப்பதால் கூடுதல் மருத்துவர்கள் தேவை குறித்த அவசியம் தற்போது எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. வரதராஜன்.

திரு. ரா. வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து . . . (குறுக்கீடுகள்)